**வேறு மாநில ஆசிரியர் கல்வி பட்டய பயிற்சி சான்றிதழ்களை மதிப்பீடு செய்தல் – அரசாணை**

சுருக்கம்

ஆசிரியர் கல்வி – கர்நாடகா, ஆந்திரா மற்றும் கேரளா மாநிலங்களில் ஆசிரியர் கல்வி பட்டய பயிற்சி சான்றிதழ்களை மதிப்பீடு செய்தல் ஆணை வெளியிடப்படுகிறது

பள்ளிக்கல்வி (ERT) த்துறை

அரசாணை (3டி) எண் 61 நாள் 07–07–2014

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (1டி) எண். 26 பள்ளிக்கல்வித் துறை நாள் 21–02–2003
2. அரசாணை (1டி) எண். 221 பள்ளிக்கல்வித் துறை நாள் 12–06–2008
3. அரசாணை (3டி) எண். 118பள்ளிக்கல்வித் துறை நாள் 03–12–2009
4. அரசாணை (3டி) எண். 4 பள்ளிக்கல்வித் துறை நாள் 04–01–2011
5 மாநிலக் கல்வியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கடித

ந.க.எண் 12210/அ3/2009 நாள் 07–01–2014 மற்றும் 26–02–2014

**ஆணை**

மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதங்களில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் ஒவ்வொரு ஆண்டும், கர்நாடக, ஆந்திரா மறறும் கேரளா மாநிலங்களிலிருந்து ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பெற்ற மாணவர்களின் சான்றுகள் தமிழ்நாட்டின் ஆசிரியர் கல்வி பட்டய பயிற்சி சான்றுக்கு இணையாக மதிப்பீடு செய்துதரக்கோரி அதிக எண்ணிக்கையில் பெறப்படுகின்றன என்றும் மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அயல் மாநில ஆசிரியர் பயிற்சி சான்றதழ் மதிப்பீடு செய்வது குறித்து தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசானையில் 2008–2009 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஆசிரியர் கல்வி பட்டய பயிற்சிக்காக கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும், இப்புதிய மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டம் 2008–2009 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு மற்றம் பாண்டிச்சேரியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்றும், எனவே அயல் மாநிலங்களில் தற்சமயம் நடைமுறையலுள்ள ஆசிரியர் கல்வி பட்டயப் பயிறச்சிக்கான படத்திட்டங்கள் நமது மாநிலத்தில் நடைமுறையிலுள்ள மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கு இணையாக உள்ளதா என்பதில் ஐய்யப்பாடு ஏற்பட்டது என்றும், இதனால் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2007–2008 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் அயல் மாநில ஆசிரியர் பயிற்சி பட்டயச சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்கு மட்டும் மதிப்பீடு சானறிதழ் வாழங்கலாம் என்றும் 2008–2009 அல்லது அதற்கு பின்னர் அயல் மாநிலங்களில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியில் சேரும் மாணவர்களின் சான்றிதழ்கள் மதிப்பீடு செய்ய எடுத்துக் கொள்ளத்தேவையில்லை என்றும் அயல் மாநில அரசு தங்கள் மாநிலத்தில் பயின்ற அரசு நிர்ணயித்துள்ள பாடத்திட்டத்தினை தமிழ்நாடு மாநில வளக்குழு உற்று நோக்கி அம்மாநில பாடத்திட்டம் தமிழ்நாட்டின் பாடத்திட்டத்திற்கு இணையானது என்று சான்றளித்ததால் மட்டுமே அம்மாநிலத்தில் பயின்ற மாணவர்களின் சான்றிதழ்களை மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மதிப்பீடு செய்து தமிழக அரசால் வழங்கப்படும் ஆசிரியர் பட்டய பயிற்சி சான்றிதழுக்கு இணையானது என சான்றளிக்கலாம் என்று ஆணையிடப்பட்டது என்றும், மேலும் மேற்படி அரசாணையில் சில திருத்தங்கள் கோரியதன் அடிப்படையில் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2007–2008 ஆம் கல்வியாண்டு அல்லது அதற்கு முன்னர் அயல் மாநிலங்களில் சேர்க்கை

செய்யப்பட்ட மாணவர்களின் அயல் மாநில ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி சான்றுகள் மற்றும் இவ்வாறான மாணவர்கள் தோல்வியடைந்து பின்னர் தேர்ச்சி பெற்ற நிகழ்வகளிலும் மேம்பாட்டு தேர்வு எழுதி மதிப்பெண்களை உயர்த்திக் கொண்டுள்ள நிகழ்வுகளிலும் பெறப்படும் அயல் மாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சி சான்றுகளை தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி சான்றுக்கு இணையானது என மதிப்பீடு செய்யலாம் என்று ஆணையிடப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் படி ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான பாடநூல்களை வடிவமைக்க பத்து வல்லுநர்கள் அடங்கிய வளக்குழு ஒன்று அமைக்கப்பட்டது என்றும் அம்மாநிலங்களில் பின்பற்றப்படும் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டங்கள் தமிழ்நாட்டு ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டத்துடன் ஒப்புநோக்கும் பொருட்டு அம்மாநில 2008–2009 அல்லது அதற்கு பின்னர் ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கும் 2007–2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு வழங்கியது போன்றே தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கு இணையாக மதிப்பீட்டாணை வழங்க கோரியுள்ளனர் என்றும், எனவே, மாநிலக்கல்வியில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலமாக அமைக்கப்ட்ட வளக்குழு ஆந்திர மாநிலத்திலிருந்தும் கர்நாடக மாநிலத்திலிருந்தும் கேரளா மாநிலத்திலிருந்தும் பெறப்பட்ட ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டங்கள் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான படத்திட்டத்திற்கு இணையாக உள்ளதா என்று வளக்குழு உறுப்பினர்களால் ஒப்புநோக்கப்பட்டது என்றும் வளக்குழு உறுப்பினர்கள் ஒவ்வாரு பாடத்திற்கும் பாடத்திட்டங்களை தனித்தனியாக பட்டியலிட்டு ஒப்பிட்டு பார்த்து பின்னர் ஒவ்வொரு பாடத்திற்கும் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு அறிக்கை அளித்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

| **வ. எண் (1)** | **பாடம் (2)** | **ஆந்திர மாநில ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பாடத்திட்டத்திற்கானது (3)** | **கர்நாடக மாநில ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பாடத்திட்டத்திற் கானது (4)** | **ஆந்திர மாநில ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பாடத்திட்டத்திற்கா னது (5)** |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | இந்திய கல்வி முறை | தமிழ்நாடு பாடத்திட்டத்தில் உள்ள 80% பகுதிகள் உள்ளன. எனவே தமிழக ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பாடத்திட்டத்திற்கு இணையாக உள்ளது. | தமிழ்நாடு பாடத்திட்டத்தில் உள்ள 80 % பகுதிகள் உள்ளன. எனவே தமிழக ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பாடத்திட்டத்திற்கு இணையாக உள்ளது. | 2005–2012 வரை பின்பற்றப்பட் ஆசிரியர் பயிற்சி சான்றிதழுக்கான பாடதிட்டத்தில் தமிழ்நாடு பாடத்திட்டத்தில் உள்ள 70 % பகுதிகள் உள்ளன. தமிழக ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பாடத்திட்டத்திற்கு இணையாக உள்ளது 2013 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் படி தமிழ்நாடு பாடத்திட்டத்தில் உள்ள 80 % பகுதிகள் கேரள மாநில பாடத்திட்டத்தில் காணப்படுவதாலும், இரு மாநிலங்களின் ஆசிரியர் கல்வி பட்டய பயிற்சிக்கான பாடத்திட்டங்கள் இணையாக உள்ளன எனக் கருதப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 1. கற்கும் குழந்தை 2. கற்றலை எளிதாக்குதலும், மேம்படுத்துதலும் 3. கல்வி உளவியல் | 60 %கும் மேலான கருத்துக்கள் இரண்டு மாநில பாடத்திட்டதிலும் பொதுவாக காணப்படுகின்ற காரணத்தால் ஆந்திர மாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டம் தமிழ்நாடு மாநில ஆசிரியர் பட்டயப்பயிற்சிக்கான பாடத்திட்டத்திற்கு இணையாக உள்ளதாக எடுத்துக்கொள்ளலாம் என்று கருதப்படுகின்றது. ஆந்திர மாநில ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்ச்சிக்கான குறைந்தபட்ச தேர்ச்சி விகிதம் 40 % தமிழ்நாட்டின் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்ச்சிக்கான குறைந்தபட்ச தேர்ச்சி விகிதம் 50 % இருப்பதால் சான்றுகளை மதிப்பீடு செய்யும் பொழுது இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழ்நாடு மாநில ஆசிரியர் | கர்நாடக மாநில ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டத்தின் நவீன உளவியல் கல்வி மற்றும் பாடத்திட்டப் பரிமாற்ற கொள்கைகளுக்கான பாடத்திட்டங்கள் தமிழ்நாடு மாநில ஆசிரியர் பட்டயப்பயிற்சிக்கான பாடத்திட்டத்திற்கு நிகராக உள்ளது. | 2005–2012 வரை பின்பற்றப்படும் கல்வி உளவியல் பாடத்திட்டத்தில் தற்சமயம் 2013 ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்படும் குழந்தை மேம்பாடும் கற்றலும் / கற்பவரும் அறிவுத்திறன் பெறுதலும் ஆசிய பாடத்திட்டங்களில் 70 % மேற்பட்ட பாடப்பகுதிகள் தமிழ்நாடு மாநில ஆசிரியர் பட்டயப்பயிற்சிக்கான பாடத்திட்டத்தில் காணப்படுவதால் இரண்டு மாநிலங்களில் பாடத்திட்டங்களும் இணையானதென கருதலாம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பட்டயப்பயிற்சிக்கான பாடத்திட்டமானது செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. எனவே, ஆந்திர மாநில ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பயின்ற மாணவ மாணவிகளை பணியில் அமர்த்தும் போது அவர்களுடைய பணியை வரன் முறைப்படுத்துவதற்கு முன்பாக அவர்களுக்கு செயல்பாடுகளுடன் கூடிய பயிற்சிகளை பெறுவதில் ஊக்குவிக்கவேண்டும் | | |
| 3 | துமிழ் மொழிகற்பித்தல் | இருமாநிலங்களிலும் இணையாக உள்ளது | இருமாநிலங்களிலும் இணையாக உள்ளது | 2005–2012 வரை பின்பற்றப்பட்ட பாடதிட்டம் இருமாநிலங்களிலும் இணையாக உள்ளது. தற்சமயம் 2013 ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்படும் தமிழ்மொழி கற்பித்தல் பாடத்திட்டத்தில் சமமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இருப்பதாலும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பட்டயப்பயிற்சி தமிழ்மொழி பாடத்திட்டத்தில் தமிழ்மொழியைக் கற்பிக்கும் முறைகள் பகுதியில் 50 % கேரள மாநில பாடத்திட்டத்திட்டத் திலும் காணப்படுவதாலும் கேரள மாநில ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான பாடதிட்டத்தில் உள்ள சில பகுதிகள் தமிழ்நாட்டுப் பாடத்திட்டத்தில் இல்லாத காரணத்தாலும் இரு மாநிலங்களின் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிறிசிக்கான தமிழ்மொழிக் கற்பித்தலுக்கான பாடத்திட்டம் இணையாஉள்ளதெ னக் கருதலாம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ஆங்கில மொழி கற்பித்தல் | தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியில் தேர்ச்சி பெற ஒவ்வொரு பாடத்திலும் 50 % மதிப்பெண் பெறவேண்டும். இதுவே ஆந்திர மாநிலத்தில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பயின்றோர் கட்டாயமாக 50 % மதிபெண்களுக்கு மேலாக பெற்றிருந்தால் மட்டுமே தமிழ்நாட்டின் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி பெற தகுதியானவர் என்றும் அன்னாரின் சான்றிதழ்களுக்கு தமிழ்நாடு மாநில ஆசிரியர் பட்டயப்பயிற்சி சான்றுக்கு இணையான மதிப்பீட்டாணை வழங்கலாம். ஆந்திர மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ள மாணவர்கள் தமிழ்நாட்டின் தகுதி மற்றும் நிகர் மதிப்பீட்டுச் சான்றிதழ் அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டாலும் | தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி ஆங்கிலப் பாடத்திட்டத்தில் பாடப்பொருள்களிலும் கற்பித்தல் முறைகளிலும் கொடுக்கப்பட்டுள்ள 79 % பகுதிகள் கர்நாடக மாநில ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி ஆங்கிலப் பாடத்திட்டதில் சேர்க்கப்பட்டுள்ள காரணத்தினாலும் இரு மாநிலங்களிலும் அகமதிபீடு மற்றும் கற்பித்தல் பயிற்சிக்கான செயல்பாடுகள் ஒரே மாதிரியாக பின்பற்றப்படும் காரணத்தாலும் ஆங்கில மொழியைக் கற்பித்தலீல் இரு மாநிலங்களின் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி | தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி ஆங்கிலப் பாடத்திட்டத்தில் பாடப்பொருள்களிலும் கற்பித்தல் முறைகளிலும் கொடுக்கப்பட்டுள்ள 73.6 % பகுதிகள் கேரள மாநிலத்தில் 2005–2012 ல் பின்பற்றப்பட்ட ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி சான்றிதலுக்கான ஆங்கில பாடத்திட்டத்தில் காணப்படுவதாலும் 78.2 %திற்கும் மேற்பட்ட பகுதிகள் கேரள மாநிலத்தில் 2013 லிருந்து பின்பற்றப்படும் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான ஆங்கிலப் பாடத்திட்டத்தில் காணப்படுவதாலும் அகமதிப்பீடு மற்றும் கற்பித்தல் பயிற்சிக்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவர்கள் தமிழ்நாடு DIET மூலம் 30 நாட்களுக்கு குறுகிய கால திறன் வளப்படுத்துதல் பயிற்சி திட்டத்தில் கலந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டு, அதன் மூலம் அவர்கள் தமது திறன் செறிவை அடையவும் வழி செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. | ஆங்கில பாடத்திற்கான பாடத்திட்டங்களு ம் இணையாகவே உள்ளது. | செயல்பாடுகள் ஒரே மாதிரியாக பின்பற்றப்படும் காரணத்தாலும் ஆங்கில மொழியைக் கற்பித்தலில் இரு மாநிலங்களின் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி ஆங்கில பாடத்திற்கான பாடத்திட்டங்களும் இணையாகவே உள்ளது |
| 5 | கணித ம் கற்பித் தல் | தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி தேர்ச்சிக்கான குறைந்த பட்டச மதிப்பெண் 50 % ஆகும். அத்துடன் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான மாணவர்கள் அகமதிப்பீட்டிலும் புற மதிப்பீட்டிலும் தனிததனியாக 40 % குறைந்த பட்சம் மதிப்பெண் பெற வேண்டும். அகமதிப்பீட்டிற்கும், புற | இரு மாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான கணித பாடத்திட்டங்களு ம் இணையான தென ஏற்றுக்கொள்ளல ாம் | 2005–2012 வரை பின்பற்றப்படும்பாடத் திட்டம் மற்றும் இருமாநிலங்களிலும் இணையாக உள்ளது. தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியில் தேர்ச்சி பெற ஒவ்வொரு பாடத்திலும் 50 % மதிப்பெண் பெறவேண்டும். எனவே, கேரள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டிறகும் தனித்தனியாக குறைந்தபட்ச மதிபெண்கள் நிர்ணயிக்கப்படவில்லை எனவே இச்சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு 50 % மற்றும் 50 % மதிபெண்களுக்கு மேலாக தேர்ச்சி பெறும் ஆந்திர மாநில ஆசிரியர் கல்வி பட்டய பயிற்சி மாணவர்களுக்கு மட்டும் தமிழ்நாட்டின் ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி சான்றுக்கு இணையான மதிப்பீட்டாணை வழங்கலாம். | | மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி சான்றிதழுக்கான பயிற்சி பெற்ற மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் 50 % மதிப்பெண்கள் பெற்றால் மட்டுமே மதிப்பீடு வழங்க வேண்டும். |
| 6 | அறிவியல் கற்பித்தல் | ஆந்திர மாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டத்திட்டம் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டத்திட்டத்திற்கு இணையாக உள்ளது. | தமிழ்நாடு ஆசிரியர் பட்டய கல்வி பயிற்சிக்கான அறிவியல் பாடத்திட்டத்திட்டத்திற்கு இணையாக உள்ளது. | 2005–2012 வரை பின்பற்றப்படும்பாடத் திட்டம் மற்றும் 2013 இல் பின்பற்றப்படும் பாடத்திட்டம் இருமாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கானஅறிவியல் பாடத்திட்டத் திட்டத்திங்களும் இணையாக உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | சமூக அறிவியல் | ஆந்திர மாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டத்திட்டம் தமிழ்நாடு ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டத்திட்டத்திற்கு இணையாக உள்ளது. | இருமாநிலங்களிலும் இணையாக உள்ளது | 2005–2012 வரை பின்பற்றப்படும்பாடத் திட்டம் மற்றும் 2013 இல் பின்பற்றப்படும் பாடத்திட்டம் கேரள மாநிலத்தின் இப்புதிய பாடத்திட்டம் தமிழ்நாடுஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டத்திட்டத் திற்கு இணையாக உள்ளது. |
| 8 | செயல்பாடுகள் | இருமாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான செய்முறைத் தேர்வு அகமதிபீட்டு பாடத்திட்டமும் இணையாக உள்ளது | இருமாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான செய்முறைத் தேர்வு அகமதிபீட்டு பாடத்திட்டமும் இணையாக உள்ளது | 2005–2012 வரை பின்பற்றப்படும்பாடத் திட்டம் மற்றும் 2013 இல் பின்பற்றப்பட்ட பாடத்திட்டம் இரு மாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான செய்முறைத் தேர்வு அகமதிபீட்டு பாடத்திட்டமும் இணையாக உள்ளது |

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன வளக்குழு பரிந்துரையினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களில் வழங்கப்படும் ஆசிரியர் கல்வி பட்டயச் சான்றிதழ்களை மேலே பத்தி

– 2 இல் உள்ள அட்டவணையில் உள்ள மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன வளக்குழு பரிந்துரையும், ஒப்பீடு செய்து அப்பரிந்துரையின் படி சரியாக இருப்பின் அரசாணை (1டி) எண் 26 பள்ளிக்கல்வித்துறை நாள் 21–02–2003 ன் படி மதிப்பீடு செய்து தமிழக அரசால் வழங்கப்படும் ஆசிரியர் கல்வி பட்டய பயிற்சி சான்றிதழுக்கு இணையானது என சான்றளிக்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குனருக்கு அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்